**07.11.2022**

**அ.வ.எண். 194/2015**

**பி.சா.1 ராதா அவர்களின் குறுக்கு விசாரணை**

வாதி ராஜா எனக்கு நிலம் கொடுத்தார் அதை அவரது பிள்ளைகள் பெயரில் பதிவு செய்ததினால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து வாதிகளின் தாத்தா நாராயணன் என்பவருக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். நாராயணன் என்பவர் தாவா சொத்தினை 1927ம் வருடம் மற்றும் 1945ம் வருடம் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான்.

தாவா சொத்தினை நாராயணன் கிரையம் வாங்கி அவர் அனுபவித்து வந்து அவர் இறந்த பிறகு அவரது வாரிசுகள் தாவா சொத்தினை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தேவராஜன் என்பவர் நாராயணனின் மகன் என்றால் சரிதான். தேவராஜ் என்பவருக்கு ராஜா, மாரி மற்றும் சந்திரன் ஆகியோர்கள் பிள்ளைகள் என்றால் சரிதான்.

மாரி என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2 முதல் 4 வாதிகள் அவரது வாரிசுகள் என்றால் சரிதான். சந்திரன் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 5ம் மற்றும் 6ம் வாதிகள் அவரது வாரிசுகள் என்றால் சரிதான்.

தாவா சொத்து குறித்து நாராயணனிடமிருந்து நான் கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். மாரி, சந்திரன் மற்றும் ராஜா ஆகியோர்கள் வாய்மொழியாக கிரையம் கொடுத்தார்கள். 6.9.1989 அன்று கிரையம் வாங்கினேன். சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பத்திரபதிவு செய்து தாவா சொத்தினை நான் கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். 1989ம் வருடம் வாய்மொழியாக கிரையம் வாங்கினேன் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு நான் எந்த கிரையமும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல.

பொதுவாக சொத்தினை உரிமைமாற்றம் செய்யவேண்டுமென்றால் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று உரிய கட்டணம் கட்டி பத்திரபதிவு செய்தால் மட்டும் தான் அந்த உரிமை மாற்றம் செல்லும் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு 2 இன சொத்துக்களுக்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் சர்வே எண் 1194/1பி ல் 5 செண்டும் மற்றும் 1194/2ல் 2 செண்டும் எனக்கு கிரையம் கொடுத்தார்கள்.

எனது பதிலுரையில் சர்வே எண் 1194/1பில் 7 செண்டு கிரையம் கொடுத்தார்கள் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். சர்வே எண் 1194/2 ஐ சொல்ல தவறிவிட்டடேன். 2015ம் வருடம் இந்த வழக்கு தாக்கல்

செய்தது முதல் 2019ம் வருடம் ஜுன் மாதம் வரை நான் நீதிமன்றத்திற்கு வந்ததில்லை என்றால் சரியல்ல. 2019ம் வருடம் ஜுன் மாதம் நான் தாக்கல் செய்த மனுவில் எனக்கு எழுதப்படிக்க தெரியாததால் நான் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றும் அதனால் வழக்கு ஒருதலைபட்சமாக தீர்ப்பாகியுள்ளது என்றும் காரணங்கள் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் எனக்கு தெரியாது.

இந்த வழக்கில் 2015ம் வருடம் நான் பதிலுரை எதுவும் தாக்கல் செய்யாமல் 2019ம் வருடத்தில் தான் நான் பதிலுரை தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு தெரியாது. உண்மையிலேயே நான் கிரையம் வாங்கியிருந்தால் எனது பதிலுரையில் அந்த விவரங்களை சொல்லியிருப்பேன் என்றாலும் நான் கிரையம் வாங்காததால் தான் அந்த விவரங்கள் குறித்து சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

தாவா 1ம் இன சொத்தில் 5 செண்டு நிலமும், 2ம் இன சொத்தில் 2 செண்டு நிலமும் நான் கிரையம் வாங்கினேன் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 11.6.2010 அன்று தாவா 2ம் இன சொத்தில் 8 செண்டு நிலத்தினை ராஜா, மாரி மற்றும் சந்திரன் ஆகியோர்கள் கன்னியப்பனுக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் 7 செண்டு நிலம் தான் கிரையம் கொடுத்தார்கள். நானும், கன்னியப்பனும் ஒன்றாக தான் கிரையம் வாங்கினோம்.

சர்வே எண் 1194/1பி ல் வாதிகளுக்கு 13 செண்டு நிலம் தான் சொந்தம் என்றால் எனக்கு தெரியாது. இன்றைய தேதி வரை தாவா சொத்தில் வாதிகளுக்கு எவ்வளவு சொத்து உரிமையானது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா 2ம் இன சொத்தில் வாதிகளுக்கு சொந்தமான 13 செண்டு நிலத்தில் 8 செண்டு நிலத்தினை கன்னியப்பனுக்கு கிரையம் கொடுத்துவிட்டு மீதமுள்ள 5 செண்டு நிலத்தினை வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

பி.சா.ஆ.1 நான் எனது மகன்களுக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். பி.சா.ஆ.1ல் சர்வே எண் 1194/1பி ல் 5 செண்டு நிலம் மற்றும் 1194/2 ல் 2 செண்டு நிலம் என்று சொல்லாமல் மொத்தமாக சர்வே எண் 1194/1பி ல் 7 செண்டு நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதிலும் நான் மற்றொரு சர்வே எண்ணை சொல்ல தவறிவிட்டேன்.

பி.சா.ஆ.1ல் அதில் கண்ட சொத்துக்கள் எனக்கு சுயமாக கிடைத்த சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை வாய்மொழியாக கிரையம் வாங்கினேன் என்று எனது பதிலுரையில் சொன்னது போல பி.சா.ஆ.1ல் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2010ம் வருடம் தாவா 2ம் இன சொத்தில் 8 செண்டு நிலத்தினை கன்னியப்பனிடம் கிரையம் கொடுத்துவிட்டு மீதமுள்ள சொத்தினை வாதிகள் அனுபவித்து வருவதால் 2015ம் வருடம் தாவா சொத்தினை குறித்து நான் செட்டில்மெண்ட் செய்து வைத்தது தவறு என்றால் சரிதான். பி.சா.ஆ.2ன் அடிப்படையில் தாவா சொத்தில் நான் உரிமைகோருகிறேன் என்றால் சரிதான்.

தாவா சொத்தின் சிட்டா மற்றும் அடங்கல் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகளின் தாத்தா கிரையம் வாங்கிய சொத்தினை குறித்து நான் பதிவுசெய்யப்பட்ட ஆவணம் மூலமாக கிரையம் எதுவும் வாங்காததால் எனது பெயரில் பட்டா தாக்கலாகி உள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தினை குறித்து எனது பெயரில் சட்டப்படியாக உரிமை மாற்றம் செய்யாத போது எனது பெயரில் பி.சா.ஆ.2 வழங்கப்பட்டது தவறு என்றால் சரியல்ல.

இன்றைய தேதி வரை வாதிகளின் தாத்தாவிடமிருந்தோ அல்லது அவரது வாரிசுகளிடமிருந்தோ தாவா சொத்தினை குறித்து எந்தவித கிரையப்பத்திரமும் நான் எழுதிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2க்கு முன்பு எனது பெயரில் எந்த பட்டாவும் தரவில்லை. பி.சா.ஆ.2ன் அடிப்படையில் தான் பி.சா.ஆ.1 எழுதினேன் என்றால் சரிதான்.

பி.சா.ஆ.2 செல்லதக்கதல்ல என்பதால் அதன் அடிப்படையில் எழுதப்பட்ட பி.சா.ஆ.1 செல்லதக்கதல்ல என்றாலும் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 அடிப்படையில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 வழங்கப்படும் போது வாதிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

பி.சா.ஆ.2 வழங்கும்போது வாதிகளை விசாரணை செய்திருந்தால் தாவா சொத்து நாராயணன் கிரையம் பெற்று வாதிகளுக்கு சொந்தமான சொத்து என்று அரசாங்கத்திற்கு தெரிந்திருக்கும் என்றால் சரிதான். நாராயணன் கிரையம் பெற்ற சொத்துக்கு அவரது வாரிசுகளை விசாரணை செய்யாமல் என்னை மட்டும் விசாரணை செய்து பி.சா.ஆ.2 வழங்கியது தவறு என்றால் என்னுடைய சொத்து என்பதாலும் நான் அதில் இருந்ததாலும் என்னை மட்டும் விசாரித்து பி.சா.ஆ.2 வழங்கப்பட்டது.

தாவா சொத்து என்னுடைய சொத்து என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை. தாவா சொத்து என்னுடைய சொத்து என்பதற்கு எந்த ஆவணமும் இல்லாதபோது பி.சா.ஆ.2 வழங்கப்பட்டது தவறு என்றால் சரியல்ல. எந்தவொரு சொத்திற்கும் பட்டா என்பது உரிமைமூலம் இல்லை என்றாலும் அதனடிப்படையில் தாவா சொத்தில்

நான் உரிமைகோருவது தவறு என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.3 என்ன ஆவணம் என்றால் பார்வை மங்கலாக தெரிவதால் எனக்கு சரியாக தெரியவில்லை.

பி.சா.ஆ.3 ல் 5வதாக உள்ள ஆவணம் 2005–2006 வருடத்திற்கான ஆவணம். பி.சா.ஆ.3 ல் 5வதாக உள்ள ஆவணம் நான் வரி செலுத்தாததால் நகராட்சியிலிருந்து அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். 2005ம் வருடத்திற்கு முன்பு நான் எந்த வரியும் கட்டவில்லை என்றால் சரியல்ல. எந்த வருடத்திலிருந்து நான் வரி செலுத்தி வருகிறேன் என்றால் 2003ம் வருடம் என் பெயரில் பட்டா வழங்கிய பின்பு 2004ம் வருடத்திலிருந்து நான் வரி செலுத்தி வருகிறேன்.

2005–2006 வருடத்திற்கான வரி குறித்து எனக்கு அறிவிப்பு அனுப்பிய பிறகு நான் வரி செலுத்தினேனா என்றால் செலுத்தினேன். அந்த வரி ரசீதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பழைய கதவு எண் 307. புதிய கதவு எண் 5/3ஏ. பி.சா.ஆ.3 வரி ரசீதுகளில் கதவு எண் 1ஏ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பி.சா.ஆ.3 தாவா சொத்திற்கு செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் இல்லை என்றால் கதவு இலக்கம் எண்ணை சரியாக குறிப்பிட தவறிவிட்டார்கள்.

பி.சா.ஆ.3 ல் வார்டு எண் WD19 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.3ல் சர்வே எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ல் வார்டு எண் ஏ16 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில் வார்டு எண் 16 ஆக இருந்ததை தற்போது 19 ஆக மாற்றிவிட்டார்கள். எந்த வருடம் மாற்றினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. பி.சா.ஆ.3 ல் நான்காம் ரசீதில் வீட்டு எண் மற்றும் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

கெங்கம்மாள் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. பி.சா.ஆ.3 ல் நான்காம் ஆவணத்தில் வரிசெலுத்துபவர் பெயர் கெங்கம்மாள் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்து அனுப்பினேன். எந்த வருடம் கெங்கம்மாளிடம் வரி செலுத்த கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. கெங்கம்மாள் என்பவர் யார் என்று பெயர் மட்டும் ஞாபகம் உள்ளது. ஆனால் நபர் யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

பி.சா.ஆ.3ல் சர்வே எண் எதுவும் குறிப்பிடாததால் அதனடிப்படையில் நான் தாவா சொத்தினை அனுபவித்து வருகிறேன் என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல. எனவே பி.சா.ஆ.3 தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றாலும் அதனடிப்படையில் எனக்கு எந்த உரிமையும் கிடைக்கதக்கதல்ல

என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.4 ல் கதவு இலக்கம் எண் 1ஏ என்றும் வார்டு எண் 19 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.3 ல் முகவரி என்ற இடத்தில் 1ஏ, செங்குந்தர் பேட்டை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

தாவா சொத்து மதுராந்தகம் நகராட்சியில், சின்னகாலணியில் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.4ல் 1ஏ சின்னகாலணி என்றும், பி.சா.ஆ.3ல் 1ஏ, செங்குந்தர் பேட்டை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.5ல் முதலாம் ரசீதில் மின் இணைப்பு எண் மற்றும் தேதி இல்லை என்றால் மின்இணைப்பு எண் உள்ளது. முருகையன் என்பவர் எனது தம்பி. அவர் தற்போது கூடுவாஞ்சேரியில் உள்ளார். சுமார் 15 வருடங்களாக அவர் அங்கு வசித்து வருகிறார்.

வாதிகளிடமிருந்து அல்லது அவர்களது முன்னோர்களிடமிருந்து முருகையன் தாவா சொத்தினை கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். 15 வருடத்திற்கு முன்பு முருகையன் எங்கு வசித்து வந்தார் என்றால் எங்களுடன் சேர்ந்து தாவா சொத்தில் தான் வசித்து வந்தார். தாவா சொத்திற்கு முருகையன் பெயரில் பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் முருகையனுக்கு எந்த

உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

பி.சா.ஆ.5 ல் முதலாம் மற்றும் இரண்டாம் ரசீதுகளில் முருகையன், மின்கட்டணம் செலுத்தியதாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எனது பெயரில் மின் இணைப்பு எதுவும் இல்லை. தாவா சொத்திற்கு முருகையன் பெயரில் எந்த ஆவணமும் இல்லாதபோது அவர் பெயரில் மின் இணைப்பு வழங்கியது தவறு என்றால் வேறொரு இடத்தில் இருந்த மின் இணைப்பை எனது தம்பி முருகையன் பெயரில் தாவா சொத்திற்கு மாற்றி மின் கட்டணம் செலுத்தி வந்தோம்.

தாவா சொத்திற்கு தனியாக மின்இணைப்பு வழங்கப்படவில்லை என்றால் எனது தகப்பனார் பெயரில் வழங்கப்பட்டது. அந்த மின்இணைப்பு எண் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனது தம்பி பெயரில் வேறொரு நிலத்தில் இருந்த மின் இணைப்பை தாவா சொத்திற்கு மாற்றினேன் என்று சொன்னதால் அந்த நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

வேறொரு நிலத்திலிருந்து தாவா சொத்திற்கு மின் இணைப்பை மாற்றுவதற்கு மின்வாரியத்தில் மனுக்கொடுத்தேனா என்றால் மனு எதுவும் கொடுக்கவில்லை. மின்வாரியத்தில் பணிபுரியும் தெரிந்த நபர் மாற்றிக்கொடுத்தார். வேறொரு நிலத்தில் இருந்த மின்இணைப்பை மின்வாரியத்தில் மனுக்கொடுக்காமல் தாவா சொத்திற்கு

மாற்றியது தவறு என்றால் சரிதான், அதனால் மின்இணைப்பை துண்டித்துவிட்டு எனது தகப்பனார் பெயரில் மின்இணைப்பு வழங்கினார்கள். சுமார் 6,7 வருடங்களுக்கு முன்பு அந்த மின்இணைப்பை துண்டித்துவிட்டு எனது தகப்பனார் பெயரில் வழங்கினார்கள்.

தாவா சொத்திற்கும் எனது தகப்பனாருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். எனவே எனது தகப்பனார் பெயரில் தாவா சொத்திற்கான மின் இணைப்பு வழங்கியது தவறு என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ல் மின்இணைப்பு எண் 673 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த மின்இணைப்பு தான் எனது தகப்பனார் பெயரில் வழங்கப்பட்டது.

பி.சா.ஆ.5 ல் மூன்றாம் ரசீது எனது தகப்பனார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதில் மின் இணைப்பு எண் 321 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே அந்த ரசீது தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாதது என்றால் சரிதான். அந்த ரசீதில் 2007ம் வருடம் கட்டணம் செலுத்தி உள்ளார்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ல் முதலாம் ரசீதில் 2010ம் வருடம் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ரசீது எனது தம்பி முருகையன் பெயரிலுள்ளது என்றால் சரிதான்.

2010ம் வருடம் மின் கட்டண ரசீது எனது தம்பி பெயரில் 2007ம் வருடத்திற்கான மின் கட்டண ரசீது எனது தகப்பனார் பெயரிலும் இருப்பதால் எனது தம்பி பெயரிலுள்ள மின் இணைப்பை துண்டித்துவிட்டு எனது தகப்பனார் பெயரில் வழங்கப்பட்டது என்று நான் ஏற்கனவே சாட்சியம் அளித்தது பொய் என்றால் எனது தம்பி பெயரில் மின்இணைப்பு வழங்குவதற்கு முன்பு என் தகப்பனார் பெயரில் மின் இணைப்பு வழங்கப்பட்டது.

(உணவு இடைவேளைக்காக குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இந்த வழக்கு தாக்கல் செய்த போது தாவா சொத்தில் கிருஷ்ணன் மற்றும் எனக்கு சொந்தமான இரண்டு குடிசைகள் இருந்தது என்றால் சரியல்ல, மாடு கட்டிவைப்பதற்காக கொட்டகை தான் இருந்தது. தற்போது தாவா சொத்தில் கிருஷ்ணனின் குடிசை மட்டும் தான் இருக்கிறது, என்னுடைய குடிசை இல்லை என்றால் கிருஷ்ணனுக்கு அங்கு வீடு இல்லை. என்னுடைய கொட்டகை மட்டும் தான் உள்ளது.

எனது கொட்டகை தற்போது பழுதடைந்த நிலையில் குடியிருக்க தகுதியில்லாத நிலையில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கு

பக்கம் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த ரோடிற்கு மேற்கு பக்கம் தான் நாங்கள் குடியிருந்து வருகிறோம் என்றால் அந்த ரோடிற்கு கிழக்கு பக்கம் தான் குடியிருந்து வருகிறோம். கிழக்கு பக்கம் கோவிந்தமுதலியார் நிலத்திற்கு பக்கத்தில் எனக்கு நிலம் உள்ளது. தற்போது தாவா சொத்தில் நான் குடியிருக்கவில்லை என்றால் சரிதான்.

2020ம் வருடத்திலிருந்து நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை. தற்போது வீடு இடிந்துவிட்டது என்றால் சரிதான். தற்போது வாதிகள் தாவா சொத்தினை கிரையம் கொடுத்தால் நான் கிரையம்வாங்குவதற்கு தயாராக உள்ளேனா என்றால் நான் ஏற்கனவே வாய்மொழியாக கிரையம் வாங்கியுள்ளதால் தற்போது கிரையம் வாங்க அவசியம் இல்லை.

தாவா சொத்தில் இருந்த வீட்டிற்கு நான் எந்த காலத்திலும் எனது பெயரில் மின்இணைப்பு பெற்றதில்லை என்றால் என் தகப்பனார் பெயரில் இருந்ததால் நான் எனது பெயரில் வாங்கவில்லை. எனது தகப்பனார் பெயரிலுள்ள மின் இணைப்பு அட்டை மற்றும் மின் கட்டண ரசீதுகள் ஏன் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் ஏற்கனவே இருந்த வழக்கறிஞரிடம் கொடுத்தேன். அவர் தாக்கல் செய்யவில்லை.

எனது பதிலுரையில் எனதுபெயரில் மின் இணைப்பு பெற்று அதற்கான மின் கட்டண ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நான் வீட்டுவரி செலுத்தி வந்தேன். வீட்டுவரி ரசீதுகளை ஏன் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை நான் ஏற்கனவே இருந்த வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

2010ம் வருடம் வாதிகள் என்னிடமும் கிருஷ்ணனிடமும் தாவா சொத்தில் குடிசை வீடு கட்டிக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.6ல் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டையிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (அந்த கையொப்பம் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

2.9.2010 அன்று தாவா சொத்து சம்பந்தமாக வாதிகளிடம் ரூபாய் 10 ஆயிரத்திற்கு கிரையத்தொகை பேசி ரூபாய் 3 ஆயிரம் கிரைய முன்பணம் கொடுத்து வாதிகளுடன் நான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த கிரைய ஒப்பந்தத்தின் அசல் பத்திரம் என்னிடம்தான் உள்ளது என்றால் சரியல்ல. அந்த கிரைய ஒப்பந்தம் குறித்து எனக்கு தெரியாது. அதில் நான் எந்த கையொப்பமும் செய்யவில்லை.

மேற்படி கிரையஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் தாவா சொத்தில் குடிசை போட்டுக்கொள்ள வாதிகள் எனக்கு அனுமதிக்கொடுத்தார்கள் என்றாலும் 1989ம் வருடத்திலிருந்து நான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருக்கிறேன் என்று நான் சொல்வது பொய் என்றாலும் சரியல்ல.

உண்மையிலேயே 1989ம் வருடத்திலிருந்து நான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்திருந்தால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு நான் அனுபவத்தில் இல்லாததால் தான் என்னால் எந்த ஆவணமும் தாக்கல் செய்யமுடியவில்லை என்றாலும் சரியல்ல.

எனது முந்தைய வழக்கறிஞரிடம் நான் ஆவணங்களை கொடுத்திருந்தால் அதை அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.3 முதல் 5 வரை உள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றாலும் அதன் அடிப்படையில் நான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருக்கிறேன் என்று கூறுவது பொய் என்றாலும் சரியல்ல.

மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரையம் வாங்குவதற்கு நான் முன்வராததால் 14.5.2015 அன்று வாதிகள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு

கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நான் நடந்துக்கொள்ளாததால் தாவா சொத்தினை காலி செய்து சுவாதீனம் ஒப்படைக்கவேண்டுமென்று வா.சா.ஆ.6 மூலம் வாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி, வாதிகள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு அவர் மேற்படி கிரைய ஒப்பந்தத்தினை ஒப்புக்கொண்டு வாதிகள் கேட்கும் போது காலிசெய்து கொடுத்துவிடுவேன் என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் அவர் என்னை பழிவாங்குவதற்காக வாதிகளுடன் சேர்ந்து செயல்படுகிறார்.

ஏன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று கிரையப்பத்திரம் பதிவு செய்யவில்லை என்றால் அவர்களும் வரவில்லை, நானும் கேட்கவில்லை, வாய்மொழியாக சொன்னதன் அடிப்படையில் தாவா சொத்தினை அனுபவித்து வருகிறோம். தாவா சொத்திற்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க கோரி வாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து வழக்கு ஏதேனும் தொடர்ந்துள்ளேனா என்றால் இல்லை.

(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை

ஒத்திவைக்கப்படுகிறது).